**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.101/2018**

**Prosecution Witnesses : 3**

| | | | |
|---|---|---|---|
| Name | : அண்ணபுஷ்பம் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA)

**03.05.2024**

**முதல் விசாரணை**

நான் வில்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் டீ கடை வைத்து நடத்தி வருகிறேன். அ.சா.1 சங்கரேஷ்வரி எனது மகள் ஆவார். 1ம் எதிரி எனது மருமகன் ஆவார். மற்ற எதிரிகள் எனது சம்மந்தக்காரர்கள் மற்றும் எனது மகளின் நாத்தனார்கள் ஆவார்கள். லதா என்பவர் 1ம் எதிரி சுரேஷ்குமார் 2 வதாக திருமணம் செய்து கொண்டார். கடந்த 2015 வது வருடம் எனது மகள் சங்கரேஷ்வரிக்கும் 1வது எதிரி சுரேஷ்குமாருக்கும் எங்கள் ஊரில் வைத்து பெரியவர்கள் முன்னிலையில் நிச்சயம் செய்து திருமணம் நடைபெற்றது. எனது மகள் திருமணத்திற்கு 25 பவுன் தங்க நகையும் 2 லட்சம் மதிப்புள்ள சீர்வரிசை பொருட்களும் 1 லட்சம் ரொக்கமாகவும் திருமண செலவிற்காக 1 1/2 லட்சம் மாப்பிள்ளை வீட்டாருக்கு கொடுத்தோம். திருமணம் முடிந்து எனது மகள் எதிரிகளின் வீட்டில் கூட்டுக்குடும்பமாக வசித்து வந்தார். இந்நிலையில் எனது மகளுக்கும் அவரது குடும்பத்தாருக்கும் சிறு சிறு பிரச்சினை இருந்து வந்தது. அதை என் மகள் எங்களிடம் கூறவில்லை. பின்பு பெரிய பிரச்சினையானவுடன் எனது மகளின் நாத்தனார்கள் மற்றும் மாமியார் சேர்ந்து என் மகளுடன் சண்டை போட்டார்கள் என என் மகள் கூறினார். நாங்கள் என் மகளின் வீட்டிற்கு சென்று சமாதானம் செய்து வைத்தோம். பின்பு எனது மகளையும் 1வது எதிரியையும் எதிரிகளின் மாடிவீட்டில் தனியாக குடுத்தனம் வைத்தார்கள். எதிரிகள் என் மகளுக்கு தெரியாமல் என் மகளுக்கு நாங்கள்போட்ட நகைகளை அடகு வைத்தார்கள். திருமணம் ஆகி 1 மாதத்திற்குள் என் மகளுக்கு பாலில் விஷம் வைத்து கொடுத்துவிட்டார்கள். அந்த சம்பவம் பற்றி அக்கம்பக்கம் உள்ளவர்கள் எங்களுக்கு போன் மூலம் தகவல் கூறினார்கள். நாங்கள் உடனே கிளம்பி எங்கள் மகள் வீட்டிற்கு சென்று பார்த்த போது எனது மகள் மயங்கிய நிலையில் இருந்தார். நாங்கள் தான் அவரை ஆம்புலன்சு மூலம் விருதுநகர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். அங்கு

1வாரம் சிகிச்சையில் இருந்தார். எதிரிகள் யாரும் என் மகளை பார்க்க வரவில்லை. 1ம் எதிரி என் மகளுடன் போனில் பேசி மிரட்டியவுடன் என் மகள் வயிற்று வலிக்கு மாத்திரை சாப்பிட்டதாக விசாரணை செய்ய வந்த போலிசாரிடம் கூறினார்கள். பின்பு என் மகளையும் 1 வது எதிரியையும் கள்ளிக்குடியில் தனிக்குடுத்தனம் வைத்தார்கள். அங்கும் 1வது எதிரிக்கும் என் மகளுக்கும் பிரச்சினை நடந்ததாக கூறினார்கள். அங்கு 1நாள் என் மகளின் வீட்டில் உள்ள வாசிங் மெஷினை 1 வது எதிரி எடுத்துச் செல்லும் போது தான் அவருக்கு வேறு பொண்ணுடன் தொடர்பு உள்ளது எங்களுக்கு தெரியவந்தது. அப்போது என் மகள் கர்ப்பமாக இருந்தார். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். காவல் நிலையத்தில் எங்களுக்குள் சமாதானம் செய்து வைத்தார்கள், எதிரிகள் இரண்டு நாட்கள் கழித்து என் மகளை அழைத்து செல்வதாக கூறினார்கள். அதன்படி அவர்கள் என் மகளை அழைத்து செல்லாததால் நாங்கள் சம்பவம் பற்றி புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி**

என் மகளுக்கும் எதிரிகளுக்கும் நடந்த பிரச்சினைகள் குறித்து நேடியாக தெரியாது. என் மகள் சொல்லி தான் தெரியும். நாங்கள் பலமுறை மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்திருந்தோம். கடைசியாக நாங்கள் கொடுத்த புகாருக்கு தான் சாட்சி சொல்ல வந்தோம் என்றால் சரிதான். விஷம் கொடுத்தது நாத்தனாரும் மாமியாரும் என்று தான் என்னிடம் என் மகள் சொன்னார். இதற்கு முந்திய புகாரில் 1ம் எதிரியும் என் மகளும் தற்கொலை செய்துக் கொள்ள எண்ணி விஷம் குடிக்க சொன்னதாக கொடுத்திருந்தால் அது தவறான புகாராகும். நகை 25 பவுன் போட்டதாக உள்ளது தான் உண்மை. 35 பவுன் என்று சொன்னால் தவறு. இதற்கு முந்தைய புகாரில் என் மகளிடம் உள்ள நகையை கொண்டு வரச்சொல்லி எதிரிகள் மிரட்டியதாக இருந்தால் அது தவறான புகாராகும். விஷம் குடித்த நிகழ்ச்சிக்கு பின்பு தான் என் மகளும் மருமகளும் கள்ளிக்குடியில் தனிக்குடித்தனம் செய்தார்கள். அங்கு 6 மாதம் குடியிருந்தார்கள். கள்ளிக்குடி வீட்டிற்கு நாங்கள் ஒரு முறை மட்டும் போனோம். எதிரிகள் அந்த வீட்டிற்கு வந்தது இல்லை. கள்ளிக்குடி வீட்டில் பிரச்சினையானவுடன் 1ம் எதிரியை விட்டுவிட்டு எங்கள் வீட்டிற்கு கூட்டி வந்துவிட்டோம். அதன் பிறகு சேர்ந்து வாழவில்லை. நாங்கள் புகார் கொடுத்துவிட்டோம். என் மகள் தான் ஆடம்பரமாக வாழ ஆசைப்பட்டு பொய்யான குற்றச்சாட்டுகளை எதிரிகள் மீது சுமத்தி எங்களிடம் கூறினார் என்றும் நான் சொல்வது போல் எந்த சம்பவமும் எதிரிகளால் நடத்தப்படவில்லை என்றாலும் சரியல்ல. எங்களுடைய தவறுகளை மறைப்பதற்காக என் மகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்தவித வரதட்சணை கொடுமையும் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUMANGALAM**

**Case No: CC.101/2018**

**Prosecution Witnesses : 4**

| | | | |
|---|---|---|---|
| Name | : முத்துக்கருப்பன் | Caste | : |
| Father 's Name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

(Accused absent.PFA)
**03.05.2024**
**முதல் விசாரணை**

நான் வில்லூரில் குடியிருந்து வருகிறேன். நான் பயர் ஒர்க்சில் பணி செய்து வருகிறேன். அ.சா.1 சங்கரேஷ்வரி எனது அக்கா பேத்தியாவாள் ஆவார். 1ம் எதிரி சங்கரேஷ்வரியின் கணவர் ஆவார். மற்ற எதிரிகள் சங்கரேஷ்வரியின் மாமனார் , மாமியார் மற்றும் நாத்தனார்கள் ஆவார்கள். லதா என்பவர் 1ம் எதிரி சுரேஷ்குமார் 2 வதாக திருமணம் செய்து கொண்டார். 2015 வது வருடம் 1வது எதிரிக்கும் அ.சா.1 க்கும் எங்கள் ஊரில் வைத்து திருமணம் நடைபெற்றது. திருமணத்திற்கு பெண் வீட்டார்கள் சார்பாக 25 பவுன் தங்க நகையும் 1 லட்சம் ரொக்கமும் 2 லட்சத்திற்கு சீர்வரிசை பொருட்களும் எதிரிகள் வீட்டிற்கு கொடுத்தார்கள். 1 1/2 லட்ச ரூபாய் நிச்சயதார்த்த செலவு செய்தார்கள். சங்கரேஷ்வரிக்கும் அவரது கணவர் மற்றும் கணவரின் குடும்பத்தாருக்கும் அவ்வப்போது பிரச்சினை நடந்து வந்தது. திருமணம் நடந்து சங்கரேஷ்வரி எதிரிகள் குடும்பத்துடன் ஒன்றாக குடியிருந்து வந்தார். லதா என்பவரை சுரேஷ்குமார் சேர்த்துக் கொண்டு சங்கரேஷ்வரியிடம் பிரச்சினை செய்து வந்தார். சங்கரேஷ்வரிக்கு பாலில் விஷம் கலந்து கொடுத்துவிட்டார்கள் என விருதுநகர் மருத்துவமனையில் சேர்த்தார்கள். பின்பு ஊர் பெரியவர்கள் முன்னிலையில் இரண்டு தரப்பினர்களுக்கும் இடையே சமாதானம் பேசினார்கள். 1வது எதிரியின் மாமா அ.சா.1 யும் 1வது எதிரியையும் கள்ளிக்குடியில் தனிக்குடுத்தனம் வைப்பதாக சொல்லி அவர்களை கள்ளிக்குடியில் தனியாக குடுத்தனம் வைத்தார்கள். 1வது எதிரி வாசிங் மெஷிங் மற்ற பொருட்களை அடமானம் வைப்பதற்காக சங்கரேஷ்வரியிட் கேட்டுள்ளார். 1வது எதிரி லதாவின் வீட்டில் இருந்து கொண்டும் சங்கரேஷ்வரியின் வீட்டிற்கு வராமல் இருந்துள்ளார். மது அருந்திவிட்டு சங்கரேஷ்வரியிடம் பிரச்சினை செய்துள்ளார். சங்கரேஷ்வரியின் அப்பா காவல் நிலையத்தில் புகார் கொடுத்து அது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் கு.வி.**

என்னோடு சேர்த்து சுமார் 20 பேர் பஞ்சாயத்து பேசினோம். பஞ்சாயத்து பேசியதில் நான் தற்செயலாக போனதால் என்னிடம் விசாரித்தார்கள். மற்றவர்களை விசாரிக்கவில்லை. பஞ்சாயத்து பேசியவர்கள் அனைவரும் உள்ளூர்க்காரர்கள். நான் மட்டும் தான் சங்கரேஷ்வரிக்கு சொந்தக்காரர். ஒவ்வொரு முறை பிரச்சினை நடந்தவுடன் என்னை வந்து பார்ப்பார்கள். நான் அதுசம்பந்தமாககேட்டுக் கொள்வேன். ஆனால் எந்த பிரச்சினையும் எனக்கு நேரடியாக தெரியாது. விஷம் யார் கொடுத்தார்கள் என்பது எனக்கு நேரடியாக தெரியாது. சங்கரேஷ்வரி சொன்னதை வைத்து சொல்கிறேன். சங்கரேஷ்வரி தனக்கு விஷம் கொடுத்தது கணவரும் அவரது குடும்பத்தாரும் சேர்த்து கொடுத்ததாக சொன்னார். கணவனும் மனைவியும் தற்கொலை செய்து கொள்ளும் முடிவு எடுத்து விஷம் குடித்ததாக என்னிடம் சொல்லவில்லை. அ.சா.1 மகளிர் காவல் நிலையத்தில் எத்தனை முறை புகார் கொடுத்தார் என்று எனக்கு தெரியாது. நான் ஒரு முறை கூட காவல் நிலையம் சென்றது இல்லை. நான் சொன்னது போல் சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.